**தலைப்பு 213 - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1..1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு - 213 கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட் சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வணிக முற்பணக் கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கான ஐந்தொகையில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணிகள் மற்றும் கட்டிடங்களின் தேறிய பெறுமதி ரூபா 192,233,776 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது ரூபா 115,492,778 ஆக காட்டப்பட்டிருந்ததன் காரணமாக அப்பெறுமதி ரூபா 76,740,998 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | அடுத்துவரும் ஆண்டுகளின் போது சரியாக இறுதிக் கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஐந்தொகையில் முன்னைய ஆண்டிற்குரிய ஒப்பீட்டு ரீதியான பெறுமதியை சரியாக காட்டுதல் வேண்டும். |
| (ii) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டுறு செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 877,525 தொகையான செலுத்த வேண்டிய மீதி பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பின்னர் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்எடிய மீதியை சரியாக பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2013 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் ரூபா 1,650,634 தொகையான 04 அச்சிடல் கடன்கொடுத்தோர் மீதிகளை 2023 ஏப்ரல் 20 ஆந் திகதி வரையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இச்செலுத்த வேண்டிய மீதியை தீர்த்து வைப்பதற்கு மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நீண்டகாலமாக காணப்பட்டு வரும் கடன்கொடுத்தோர் மீதியை முடியுமான அளவு விரைவாக தீர்த்துவைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | அச்சகர்களுக்கு கொடுப்பனவு செய்யும் பதிவேட்டில் காட்டப்படுகின்ற ரூபா 1,763,792 தொகையான 06 கடன்கொடுத்தோர் மீதிகள் அங்கீகரித்த முற்பணக் கணக்கின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் இதன் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் மீதியானது அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அடுத்துவரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் மீதியை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | அரசாங்க அச்சக திணைக்களத்தின் மூலம் அச்சிடப்பட்ட 7 ஆம் தரத்தின் இரண்டாம் மொழி தமிழ் பாடப்புத்தகம் தொடர்பாக 2022 மார்ச் 21 ஆந் திகதி செலுத்தப்பட்ட ரூபா 6,208,462 பணம் அச்சகர்களுக்கு கொடுப்பனவு செய்யும் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவக்கை எடுக்கப்படும் | கொடுப்பனவு செய்கின்ற சந்தர்ப்பத்திலேயே சரியாக உரிய பதிவேடுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | அங்கீகரித்த முற்பணக் கணக்கின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 26 அச்சக நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 13,450,484,491 தொகையான கடன்கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அக்கடன் கொடுத்தோர் மீதிகளின் சரியான | அடுத்துவரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் நேரடியாக கணக்காய்விற்கு கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | | |
| (vii) | 2009 ஆம் ஆண்டிலிருந்து வரையறுத்த தேசிய கடதாசிகள் கம்பனியிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 7,431,012 பணத்தை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | அறவீடு செய்யப்பட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (viii) | நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பாடப்புத்தகங்களை வழங்காமையின் அடிப்படையில் அச்சக நிறுவனங்களிடமிருந்து மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட தண்டப் பணம் 1,635,455 கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டிற்கான தேறிய இலாபம் அத்தொகையால் குறைத்தும் கடன்கொடுத்தோர் மீதி அத்தொகையால் அதிகரித்தும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. | சரிசெய்வதற்கு நடவக்கை எடுக்கப்படும் | தண்டப்பணத்தை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| அங்கீகரித்த முற்கபணங்கள் கணக்கின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் 06 விடயங்களின் பெறுமதி ரூபா 135,971,166 ஆக இருந்ததுடன் நிதியற்ற சொத்துக்கள் கூற்றின் பிரகாரம் அந்த நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 96,474,071 ஆக இருந்ததனால் ரூபா 39,497,095 வித்தியாசம் காணப்பட்டது. | அடுத்துவரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக நிலையான சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **பிணைப் பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடு தயாரிக்கப்படவில்லை. | அடுத்துவரும் காலங்களில் பிணைப் பதிவேட்டினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

**(ஈ) கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதியற்ற சொத்துக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 92,145,416 பெறுமதியான காணி மற்றும் ரூபா 187,950,284 பெறுமதியான கட்டிடங்களின் பெறுமதிகளை உறுதிப்படுத்துகின்ற தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அடுத்துவரும் காலங்களில் உரிய தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு உரிய தகவல்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 395(இ) | ஒவ்வொரு மாதமும் வங்கி கணக்கிணக்க கூற்று தயாரிக்கப்பட்டு அடுத்துவரும் மாத்தின் 15 ஆந் தகிதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வங்கி கணக்கிணக்க கூற்று அறிக்கைகளை தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ii) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி மற்றும் 03 (ஆ) ஆம் பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமானது விபரமாகவும் தெளிவாகவும் தயாரிக்கப்படவில்லை. | அடுத்துவரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 வெளிநாட்டு உதவி செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பொதுக் கல்வியினை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் நிதியினைப் பயன்படுத்தி e - தக்சலாவ நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா | 2021 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட வீடியோக்களுக்கு மத்தியில் தொழில்நுட்ப | செயற்திட்டத்தின் நிதியை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | 27,007,620 செலவு செய்து 551 டிஜிடல் கற்பித்தல் உதவி வீடியோக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 431 வீடியோக்கள் மாத்திரம் 2022 ஆம் ஆண்டின் போது தரவு ஏற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அந்த தரவு ஏற்றம் செய்யப்பட்ட வீடியோக்களில் ஒரு வீடியோவின் சராசரி பார்வையிடும் தவணைகள் 150 போன்ற மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டின் போதும் ரூபா 25,473,288 செலவு செய்து e - தக்சலாவவிற்காக 480 டிஜிடல் கற்பித்தல் உதவி வீடியோக்களைத் தயாரிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் 2023 ஆகஸ்ட் மாதம் வரை அவற்றில் 420 வீடியோக்கள் மாத்திரம் இணைய தளத்திற்கு தரவு ஏற்றம் செய்யப்பட்டிருந்தன. | குறைபாடுகள் காணப்பட்ட சில வீடியோக்கள் 2021 ஆம் ஆண்டின் போது e - தக்கசாவவிற்கு தரவு ஏற்றம் செய்வதற்கு முடியாதிருந்ததுடன் அவற்றினை மீண்டும் சரிசெய்து தரவு ஏற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு தெரியப்படுத்தும் குறிக்கோளில் 12 மற்றும் 13 ஆம் தரத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான இலத்திரனியல் வாசிப்பு கையேட்டினை (E-Book) தயாரிப்பதற்கு கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் அங்கீகாரம் வழங்கியிருந்தும் பின்னர் அது அச்சிடப்பட்ட புத்தகமாக தயாரிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. இதன் காரணமாக 15,000 பிரதிகளை அச்சிடுவதற்காக ரூபா 7,258,500 தொகை மேலதிக அச்சிடல் செலவாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2023 ஆகஸ்ட் மாதமளவில் ரூபா 1,354,920 கிரயமான 2,800 புத்தக பிரதிகள் களஞ்சியத்தில் மிகுதியாகக் காணப்பட்டன. | அடுத்துவரும் காலங்களில் இப்புத்தகங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அங்கீகரிக்கப்பட்டவாறு இலத்திரனியல் வாசிப்பு கையேடாக தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அச்சிடப்பட்ட கையேட்டினை பயனபடுத்துவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படுதல் வேண்டும். |

## 2.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| (அ) மேலே 2.1 (ஆ) பந்தியில் குறிப்பிட்ட இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான மேலதிக வாசிப்பு புத்தகத்தினை அச்சிடுவதற்காக தகமைபெற்ற 35 அச்சகர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.3.2(ஆ) மற்றும் (இ) பந்திகளின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படாமையின் காரணமாக கேள்வி ஆவணங்களை வரைபாக்குதல், பொருள் விபரக் குறிப்பினை தயாரித்தல் முதலிய நடவடிக்கைகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பங்குபற்றியிருக்கவில்லை. மேலும் இப்பெறுகைக் குழுவானது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.5.1(ஆ) (இ) மற்றும் (ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இப்புத்தகத்திற்காக விலைமனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு முன்னர் எழுத்துக்களைகோர்வை செய்தல், முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது அச்சுப் பிழை திருத்தங்களைச் சமர்ப்பித்தல், 10 முன் பிரதிகளைச் சமர்ப்பித்தல் மற்றும் முழுப் பிரதிகளையும் அச்சிடலும் பகிர்ந்தளித்தலும் முதலிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறிப்பிடத்தக்க அளவு காலம் எடுப்பதனால் புத்தகங்களை அச்சிட்டு களஞ்சியத்திற்கு வழங்குவதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 மாத காலம் அச்சக நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2023 ஆம் ஆண்டிற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட 14 அச்சக | அச்சகங்களில் காணப்படுகின்ற வசதிகளுக்கு இணங்க அச்சிடுவதற்கு எடுக்கின்ற கால வீச்சில் வித்தியாசம் உள்ளதுடன் முன்னுரிமைக்கு இணங்க 03 மாதங்களுக்குள் அச்சிடப்பட்ட புத்தகங்களை களஞ்சியத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி புத்தகங்களை அச்சிட்டு ஒப்படைக்கும் நடைமுறையினை முறைப்படியாகவும் நடைமுறை நிலைமைகளுக்கு இணங்கிய வகையிலும் மேற்கொள்ளுதல் வேண்டும். |

நிறுவனங்களினால் உடன்படிக்கை செய்து ஒரு மாதம் கடப்பதற்கு முன்னர் 2023 சனவரி 30 ஆந் திகதியளவில் பாடப்புத்தகங்களின் 3,310,000 பிரதிகள் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது. குறுகிய காலத்தில் பாடப்புத்தகங்களை களஞ்சியத்திற்கு வழங்குதலானது நடைமுறைச் சாத்தியமற்றது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணைவைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்க வேண்டிய போதிலும் திணைக்களத்தின் நிதி நடவடிக்கைகள் சம்பந்தமான பொறுப்பு வகிக்கின்ற எந்த உத்தியோகத்தரும் பிணை வைத்தல் மேற்கொண்டிருக்கவில்லை. | அடுத்துவரும் காலங்களில் பிணை வைப்பதற்காக பணத்தை அறவிட்டு கணக்குகளில் வைப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2023 ஆம் ஆண்டு தொடர்பாக 2022 ஆம் ஆண்டின் போது 32,890,400 பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்காக 23 அச்சக நிறுவனங்களுடன் திணைக்களம் உடன்படிக்கை செய்திருந்தும் முதலாவது பாடசாலைத் தவணை 2023 மார்ச் 20 ஆந் திகதி ஆரம்பிக்கையில் பாடப்புத்தகங்களை பகிர்ந்தளிக்கும் நிலையங்களுக்கு 15,645,654 பாடப்புத்தகங்களை பகிர்ந்தளிப்பதற்கு திணைக்ளத்திற்கு முடியாதிருந்தது. | திணைக்களத்தின் வளங்களை உச்சஅளவு வினைத்திறனாக பயன்படுத்தி திணைக்களத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் பாடசாலை புத்தகங்களை அச்சிட்டு பாடசாலைகளுக்கு பகிர்ந்தளித்தல் திணைக்களத்தின் அடிப்படை பொறுப்பு என்பதனால் அதற்காக முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 ஆம் ஆண்டின் முதலாவது பாடசாலை தவணை 2022 ஏப்ரல் 18 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அச்சிடப்பட்ட மொத்த பாடப்புத்தகங்களின் பிரதிகளில் 67 சதவீதமானவற்றை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியின் போது பகிர்ந்தளிக்க முடியாதிருந்தது. | தற்பொழுது பாடப்புத்தகங்களில் 83 சதவீதமானவை பகிர்ந்தளிக்கப்பட்டு விட்டன. | முதலாவது பாடசாலை தவணை ஆரம்பிப்பதற்கு முன்னர் பாடசாலைகளுக்கு பாடப்புத்தகங்களை பகிர்ந்தளிக்கும் திணைக்களத்தின் பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பிடிபன A, B மற்றும் C களஞ்சியங்களை உள்ளடக்கி பாடப்புத்தக களஞ்சிய கட்டிடத் தொகுதி முழுவதனையும் உள்ளடக்கும் வகையில் CCTV கமரா முறைமை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டின் போது CCTV கமரா முறைமையினை பொருத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | களஞ்சிய கட்டிடத் தொகுதியினை உள்ளடக்கும் வகையில் CCTV கமரா முறைமையை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | தேவைப்பாட்டினை இனங்கண்டு பாடப்புத்தகங்கள் அச்சிடப்படாமையின் காரணமாக 2021 ஆம் ஆண்டின் போது பாடப்புத்தகங்களின் 6,191 பிரதிகள் கைதவிர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட 10 ஆந் தரத்தின் தொழில்முயற்சி கற்கைகள் ஆங்கில மொழி பாடப்புத்தகத்தின் 5,307 பிரதிகள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத மட்டத்தில் காணப்பட்டது. | அடுத்து வரும் காலத்தில் வருடாந்த தேவைப்பாட்டினை இனங்கண்டு பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு தேவையான புள்ளி விபரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. | வருடாந்த பாடப்புத்தக தேவைப்பாட்டினை இனங்கண்டு பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் காணப்படுதல், பாடவிதானங்கள் மாற்றமடைதல் முதலிய காரணங்களால் 2022 ஆம் ஆண்டின் போது மேலதிக வாசிப்பு புத்தகங்களின் 241,056 பிரதிகளும் வினாத்தாள் புத்தகங்களின் 162,663 பிரதிகளும் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. | அடுத்துவரும் ஆண்டிற்காக மேலதிக புத்தகங்ளை அச்சிடும் போது தேவைப்பாட்டினை இனங்கண்டு அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருடாந்த மேலதிக புத்தகங்களையும் வினாத்தாள் புத்தகங்களையும் தேவைப்பாட்டினை சரியாக தீர்மானித்து அச்சிடுதல் வேண்டும். |
| (ஊ) | 2008 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு அமைச்சரவை தீர்மானங்களுக்கு இணங்க கைதவிர்ப்புச் செய்யப்பட்ட ரூபா 312,831,071 பெறுமதியான | களஞ்சிய மீதியினையும் மீண்டும் பயன்படுத்திய சதவீதத்தினையும் கணித்து 2024 ஆம் | வருடாந்த பாடப்புத்தகங்களின் தேவைப்பாட்டினை இனங்கண்டு அச்சிடப்பட வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | புத்தகங்கள் 2017 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களில் நீக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத புத்தகங்களாக ரூபா 93,420,366 தொகையினை திணைக்களம் இனங்கண்டிருந்தது. | ஆண்டிற்கான பாடப்புத்தகங்களின் தேவைப்பாடு கணிக்கப்பட்டுள்ளது. | புத்தகங்களின் அளவு தீர்மானிக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஹோமாகம பிடிபனவில் அமைந்துள்ள பாடப்புத்தக களஞ்சிய கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியை மீளாய்வாண்டின் இறுதி வரையும் சட்டரீதியாக திணைக்களத்தினால் பொறுப்பேற்பதற்கு முடியாதிருந்தது. | திணைக்களத்திற்கு பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | களஞ்சிய கட்டிடத் தொகுதி அமைந்துள்ள காணியை திணைக்களத்தினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |